**Most Rev. Dr. A. Stephen**
Bishop of Tuticorin
Tel : 0461 - 2320035 (Off)

Catholic Bishop's House,
82, Great Cotton Road,
Tuticorin - 628 001. INDIA.
E-mail : sthevantuticorin@gmail.com

சுற்றுமடல் எண்: 2/2025

06.03.2025

# தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகை அவர்களின் தவக்கால சுற்றுமடல் - 2025

**இறை இயேசுவில் என் அன்பார்ந்த அருட்பணியாளர்களே, அருள்துறவியர்களே, என் அன்பார்ந்த இறைமக்களே இறையேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்!**

## உறவே மனிதம் உறவே புனிதம்

### கடவுள் நன்மைத்தனத்தின் ஊற்று:

கடவுளின் கரையில்லா அன்பைக் கூறுவதுதான் விவிலியம். கடவுளின் அன்பும் மனிதனின் மானக்கேடும் இணையாகச் செல்வது தான் வாழ்க்கை. இது இணைகோடுகளாகச் செல்கையில் மனிதன் கடவுளுக்குச் சவாலாகி விடுகின்றான். இவ்வுலகில் அன்பு பலமுறை நொந்து போவதைக் காண்கிறோம். அன்பு அணுகுண்டையும் தோற்கடிக்கும் வல்லமை கொண்டது என அய்ன்ஸ்டைன் (Einstein) கூறியபோதும். மனிதன் ஆக்கம் தரும் அன்பைப் பயன்படுத்தாது அழிவைத்தரும் அணுகுண்டைத்தான் பயன்படுத்துகின்றான்.

தீமை நன்மைத்தனத்தின் ஊற்றான கடவுளுக்குத் தொல்லையாக உள்ளது. இயேசு தனது உடலையும் உயிரையும் தந்து தீமையை வென்றுவிட்டார். பாவத்தைக் காலில் போட்டு மிதித்து விட்டார் என்று திருநூல் கூறினும் (மீக்.7:19) பாவத்தின் கோரம் தொடர்கிறது. மனித வரலாறு கொலையிலும், கொள்ளையிலும், ஏய்த்தலிலும், ஏமாற்றுவதிலும் வெற்றிப் பயணம் நடத்துவதைக் காண முடிகிறது. உலகில் பெரிய அரசர்களெல்லாம் இரத்தக்கறை கொண்ட கரங்களை உடையவர்கள். ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் பாவத்தின் அடிமைகளாக, ஆதிக்கவாசிகளாக, அடிமைத்தனத்தை மறைமுகமாகத் தொடர்பவர்களாக உள்ளனர் என்பது நெஞ்சைப் பதற வைக்கிறது.

### மனிதனுக்கு ஒப்புரவு ஏற்படுத்துபவர் இயேசு:

மனிதன் இத்தகைய கொடிய செயல்களால் மண்ணை இரத்தக்கறையாக (தொ.நூ.:4:10) மாற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் அதற்கு அன்பெனும் மருந்திட்டு, வாழ்வெனும் பரிசு தந்து, அமைதியெனும் மகிழ்வை வழங்கி சகோதரத்துவத்தை, சமத்துவத்தையும் ஒப்புரவையும் எற்படுத்த வருபவர் தான் இயேசு.

திருவிவிலியம், அண்ணன் தம்பி இருவரிருக்க, அவர்களால் ஒற்றுமையாக அமைதியாக வாழ இயலவில்லை என்பதை பதிவுசெய்கிறது. இது கடவுளுக்குக் காணிக்கை செலுத்தும் சூழலில் நடைபெறுகிறது. கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கையில் ஒருவரின் இதயம் காயப்படுகிறது. கடவுளின் சந்நிதியில் இதயம் பெரிதாகவும் ஆகலாம். குறுகியும் போகலாம். கனிவும் பெருகலாம். கயமையும் குடி கொள்ளலாம். இதயம் அன்பின் ஊற்றாகலாம் அல்லது பொறாமையின் உறைவிடமாகவும் மாறலாம்.

**மனம்மாற மறுக்கும் மனிதன்:**

திருநூல் கூறுகிறது - மனிதன் தவறிழைத்த பின்பும் அவன் அதை ஏற்றுக் கொள்ளாது, இறுமாப்போடு, மனவருத்தம் பெறாது. ஆண்டவரிடம் திரும்பிவர மறுத்துவிடுகிறான். இதை சீராக் ஞானம் உரக்கக் கூறுகிறது. (3:27-28)

*"அடங்கா மனத்தோர் தொல்லைகளால் அழுத்தப்படுவர். பாவிகள் பாவத்திற்குமேல் பாவம் செய்வார்கள். இறுமாப்புக் கொண்டோரின் நோய்க்கு மருந்து இல்லை. ஏனெனில் தீமை என்னும் செடி அவர்களுள் வேரூன்றி விட்டது".*

உளவியலார் கூட இந்தத் தெளிவுடன் கூறமாட்டார்கள். திருநூல் ஆசிரியர் ஆபேல் காயினின் உறவை வெளிப்படுத்தும் வகையில் உளவியல் ரீதியில் அணுகி அவனைத் திருத்த முயல்கிறார். ஆண்டவர் விடுக்கும் எச்சரிக்கை அவனில் செவிடன் காதில் ஊதிய சங்கிற்கு ஒப்பாகிறது.

**சினம் உன்னையும், நண்பனையும் கொல்லும்:**

நீ ஏன் சினமுற்று இருக்கிறாய். சினம் உன்னையும் கொல்லும் உனக்கு அடுத்திருப்போரையும் கொல்லும். கடவுளின் முன்னெச்சரிக்கையைக் கவனித்தால் அவர் மனித உயிரை எவ்வளவு மதிக்கிறார்; எப்படியேனும் அதைப் பாதுகாக்க விரும்புகிறார் என்பது தெரியும்.

*"நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்?*
*உன் முகம் வாடியிருப்பது ஏன்?*
*நீ நல்லது செய்தால் உயர்வடைவாயன்றோ*
*நீ நல்லது செய்யாவிட்டால் பாவம்*
*உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும் (தொ.நூல் 3:6,7) நீ அதை அடக்கி ஆளவேண்டும்"* என்றார். இதைவிடத் தெளிவாக, வெளிப்படையாக, முகத்துக்கு முகமாக இறைவன் கொடுக்கும் எச்சரிக்கையை விட வேறு வார்த்தைகள் உண்டோ?

*"காயினின் கடுஞ்சினம் அவனது முகத்தை வாட்டியது"* (தொ.நூல் 3:5). தீயதற்கு அடிடையாகிவிடுகிறான் காயின். அவனின் சினமும், அவனின் வெறுப்பும் தலைக்கேறிவிட்டது. அவை அவனை ஆட்டிப்படைக்கின்றன. தெரிந்தோ, தெரியாமலோ அவன் அதற்கு அடிமையாகிவிடுகிறான்.

*"காயின் ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றான்"* (தொ.நூல் 4:8) முதற் கொலை அரங்கேறுகிறது. மனித உயிர் பாதுகாப்பாக இல்லை. பாம்போ, வனவிலங்குகளோ, இயற்கையோ சதி செய்து மனிதனைக் கொன்றழிப்பதைவிட மனிதனே மனிதனைக் கொல்வதுதான் மிகப்பெரிய அவலமாக உள்ளது. உண்மைதான் தவறிழைத்த மனிதன் தனது பெரிய குற்றத்திற்கு பொறுப்பேற்க வேண்டும். மறுபடியும் சினம் கொள்ளக்கூடாது.

**மனிதனின் எதிரிகள்:**

இப்போது மண் எதிரியாகிறது. மனிதர் எதிரியாகின்றனர். மனிதன் கடவுளை விட்டுச் சென்று விடுகிறான்.

கடவுள் தண்டித்தாலும் அவர் மனிதனுக்குக் கருணை காட்டுகிறார். அதைக் கூறுவதுதான் இந்தத் தவக்காலம். கடவுளன்பு கரையில்லாதது எதுவும் கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது.

**நிலத்திற்குப் பகைவன்:**

இந்த நிலம் இறைவன் படைத்தது. இறைவனே மனிதனாக வந்து இந்த மண்ணில் குடியிருந்தார். தமது திருப்பாதங்களை இந்நிலத்தில் பதித்து அதைப் புனிதமாக்கினார். இது நமது தாய் போன்றது. நம்மைக் காப்பது, உணவு உயிர்மூச்சு தருவது. நாம் உயிர் வாழ நமக்கு உதவுவது. இது கோயில் போன்றது. இதை மதித்துப் பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பு. இதை அழிப்பதும், சகமனிதனின் இரத்தத்தைச் சிந்துவதும், சண்டைகளை உண்டாக்கி மாபாதகங்கள் செய்வதும் இந்த நிலத்திற்கு ஏற்புடையதல்ல. இதைக் காப்பது நமது கடமை. இது நம் ஆன்மீகமாகும். இதை மாசுபடுத்தக் கூடாது. இந்த அழகை அழிக்கக் கூடாது. இந்த உயிர்களைக் காப்பது நமது தலையாய கடமை.

**மனிதனுக்குப் பகைவன்:**

சகமனிதன் கடவுளின் பிள்ளை. அவர் சாயலைத் தாங்கியவன் கடவுளால் அன்பு கூரப்படுபவன். கடவுள் அவனில் வாழ்கின்றார். மனிதன் தந்தையாகிறான். தாயாகிறான். சகோதரனாகிறான். சகோதரியாகிறாள். இந்த உறவு நாம் தேர்ந்ததல்ல. கடவுள் நமக்குக் கொடுத்தது. தந்தையும், தாயும், சகோதரர் சகோதரிகள் யாரையும் நாம் தேர்ந்ததில்லை. இது கடவுளின கொடை. இவர்களை மதித்து, உறவோடு வாழும் போது மண் மகிழ்கிறது. அகிலம் அகமகிழ்கிறது.

உறவை உடைப்பதும், சகோதரனைக் கொல்வதும் ஏற்க முடியாதது. உறவைக் கட்டி எழுப்ப வேண்டும். உதறித் தள்ளிவிடக் கூடாது. உயிர்வதை செய்வது பெரும்பாவம். மனிதன் மனிதனை ஏமாற்றுவது, பகைப்பது, சிறுமைப்படுத்துவது, கொடுமைப்படுத்துவது, தாழ்ந்தவனாக நினைப்பது, மதிக்காதது, மாண்பை சிதைப்பது எல்லாம் மனித கொலையின் மற்ற பரிமாணங்களே. *மனிதர்கள் ஓநாய்களல்ல நம்மை விண்ணுலகம் சேர்க்கும் தோழர்கள்.* மனிதனுக்கு மனிதன் பகையாளியல்ல. இதைத்தான் இயேசு போதித்தார். இவரது இரத்தமும் தரையில் சிந்தியது. ஆனால் அது வாழ்வின் இரத்தமாக, வளமையின் உரமாக, மீட்பின் காவியமாகத் துலங்கியது. ஆபேலின் இரத்தமோ நீதிக்காகத் துடித்தது. அந்த இரத்தத்தை மண் விழுங்கியது. அது மனிதரின் பகைவனானது. இயேசுவின் இரத்தம் பகையைவென்று அன்பின் உறவானது.

மனிதன் மனிதனை சகோதரனாக, சகோதரியாக மதித்து நடக்க வேண்டும். அதுதான் ஆயர்மன்றம் கூறும் அறிவுரை. ஒருவர் மற்றவருடன் இணைந்து நடப்பதும் எவரையும் தள்ளாமலும், மிதித்துவிடாமலும், கோபம் மற்றும் வெளிவேடத்தால் எவரையும் பின்னால் விடாமலும், ஒதுக்கிவிடாமலும் இருப்பதாகும். நாம் அனைவரும் அன்பிலும், பொறுமையிலும் அடுத்தவர் நலனில் அக்கறை கொண்டு ஒற்றை இலக்கை நோக்கி உறுதியோடு ஒரே திசையில் பயணிப்போம் (போப் பிரான்சிஸ்)

**தனக்குப் பகைவன்:**

தீமையை நினைப்பவன், அதைக் கருத்தரிப்பவன், மனதில் இருத்திப் பழிவாங்கத் திட்டமிடுபவன் தனக்கே பகைவன். அவனது உள்ளமும், உடலும் அவனை அடிபணியவைத்துவிடும். அவன் தீமைக்கு அடிமையாகிவிடுகிறான். தன்னைக் கொல்பவனும் அவனே.

**கடவுளுக்கும் பகைவன்:**

கடவுள் மனிதனிடமிருந்து மறைந்து போகிறார் தீமை செய்பவன் கடவுளை விட்டு விலகுகிறான். புனிதம் மறைகிறது. அருள் அகல்கிறது. அவனது முகம் கோபமாகவும், கொடூரமாகவும் மாறுகிறது. தீயவனுக்கு மனிதர் மட்டுமல்ல, கடவுளும் மறைந்துவிடுகிறார். அவன் மனசாட்சி மறைகிறது. தொடக்க நூல் *"கடவுள் மனிதனை வெளியே துரத்திவிட்டார்"* (3:24), *"காயின் ஆண்டவரின் முன்னிலையில் விலகி சென்றுவிட்டான்"* (4:16) என்று கூறுவதைக் கவனிப்போம்.

**இறைவன் விடுக்கும் அழைப்பு:**

இவைகளை சரிப்படுத்த மனமாற்றம் இன்றியமையாதது. *"மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்"* (மாற். 1:15, மத். 4:17) என இயேசு அழைப்பு விடுக்கிறார். அடுத்து மனமாற்றம் உறவை உறுதிப்படுத்த வேண்டும் இதற்கு உறுதுணையாக இருப்பது இறைவாக்கினர் மீக்கா கூறுகிறார்.

*"ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கிறாரே. நேர்மையைக் கடைபிடி இரக்கம் கொள். கடவுள் முன் தாழ்ச்சியோடு நடந்து கொள்"* (6:8) அடுத்து வேண்டியது ஒப்புரவு. காணிக்கைகளைவிட *"முதல் முதலில் உங்கள் பகைவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்"* (மத் 5:24) என்று ஆழ்ந்த நல்லுரையை இயேசு அளிக்கிறார்.

இவரேதான் தவக்காலத்தில் கடவுளோடு உரையாட நேரம் செலவிடு என்கிறார். உண்மை உரையாடல் ஆழ்ந்த உறவால் கணிக்கப்படுகிறது. இது இதயமும் இதயமும் பகிரும் இன்பநேரம். இறைவேண்டுதல், வார்த்தைகளல்ல, பலியல்ல. அது பரவசமூட்டும் உறவு. நம் சகோதரரோடு, சகோதரிகளோடு நாம் கொள்ளும் உண்மை உறவு. நாம் காட்டும் அன்பே. நமது உடைமைகளைப் பகிர்தலே உண்மை தர்மம். உண்ணாமல் இருப்பதும் உடலை ஒறுத்து தவம் இருத்தலும் நோம்பு ஆகாது. உண்மை நோன்பு அடிமைகளை, ஒரங்கட்டப்பட்டோரை விடுவிப்பதும், மன அழுத்தம், காயங்கள் உடையோரை ஆற்றுப்படுத்துவதும் ஆகும் (எசா.58:1-12)

இந்தத் தவக்காலம் பாவத்திலிருந்தும், பகைமையிலிருந்தும், தீய செயல்களிலிருந்தும் விடுதலை தந்து சகோதரனை நண்பனாக ஏற்று யூபிலியாண்டையும், ஆயர் மன்றம் தரும் அழைப்பையும் வாழ்வதாகும். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புடன் ஆசீரளிக்கும்,

அ. ஸ்டீபன்

**மேதகு ஆயர் A. ஸ்டீபன்**
**தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர்**

A. STEPHEN BISHOP OF TUTICORIN

**குறிப்பு:**

**16.03.2025, தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு அன்று நடைபெறும் ஒவ்வொரு திருப்பலியிலும் இத்தவக்காலச் சுற்றுமடலை வாசிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**கிறிஸ்து பிறப்பின் யூபிலி ஆண்டின் பல்வேறு திட்டங்கள் மறைமாவட்டத்தால் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்களும் பல்வேறு திட்டங்களை உங்களுடைய பங்கில் செயல்படுத்துவதாக அறிந்து மகிழ்கிறேன், உங்களை வாழ்த்துகிறேன். தவக்காலத்தில் நீங்கள் பங்குத் திருப்பயணம் செல்லும்போது மறைமாவட்டத்தில் பரிபூரண பலன் கொடுக்கப்பட்ட திருத்தலங்களையும், ஆதரவற்ற, மாற்றுத்திறனாளி, முதியோர் இல்லங்களையும், மருத்துவமனைகளையும் சந்திக்க கேட்டுக்கொள்கிறேன்.**